பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 143

வெள்ளிக்கிழமை
18 ஏப்ரல் 2025

சித்திரை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## விடுவிக்கக்கூடிய காணிகளை நிச்சயம் நாம் விடுவிப்போம்!

யாழ்ப்பாணம், ஏப். 18
பாதுகாப்புப் பிரச்சினைகளைக் காரணம்காட்டி மக்களின் காணிகளை தொடர்ந்தும் வைத்திருக்க முடியாது. 11

# திஸ்ஸ விகாரையில் உள்ள அரசியல் நீக்கப்படவேண்டும்

## தீர்வு கிட்டுவதற்கு அதுவே வழியாம் ஜனாதிபதி அநுர யாழில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரையை மையமாக வைத்து, வடக்கிலும் தெற்கிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியலை நீக்கினால், இந்தப் பிரச்சினைக்கு மிக இலகுவாகத் தீர்வுகாண முடியும் இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 11

எந்தக் கடினமான சூழ்நிலையிலும்

## தமிழர்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்யமாட்டேன்!

ஜனாதிபதி அநுர உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 18
தமிழ் மக்கள் எங்களைத் தெரிவுசெய்தது எம்மீதுள்ள நம்பிக்கையாலும் அன்பாலும் மட்டும்தான். ஆதலால், தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் எந்தக் கடினமான சூழ்நிலையிலும் துரோகம் செய்யப்போவதில்லை இவ்வாறு ஜனாதி 11

## உச்சகட்ட பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
ஜனாதிபதி அநுரவின் வருகையை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நேற்று உச்சகட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
ஜனாதிபதி அநுர இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது 11

## உறவுகளைத் தொலைத்த வேதனை எனக்குப் புரியும்

ஜனாதிபதி உருக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 18
படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் விசாரித்து, வெளிப்படுத்துவோம். அதைப் பொறுப்பான அரசாங்கமாக நிறைவேற்றுவோம். ஏனெனில், உறவுகளைத் தொலைத்த வேதனை எனக்குப் 11

## உயர் பாதுகாப்பு வலயத்திலும் காணி விடுவிப்புகள் வேண்டும்!

பாதிக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 18
வலிகாமம் வடக்கில் கடந்த 35 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலி. வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.
வயாவிளான் சந்திப்பகுதியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் 11

## காணிகளை விடுவிக்குமாறு கோரியோருக்கு கெடுபிடி!

விரிவு பக்:- 07

உள்ளூராட்சித் தேர்தல்

## தபால் வாக்களிப்பு; திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 18
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தபால் மூலமான வாக்களிப்புத் திகதிகளில் மாற்றங்கள் செய்யப் 11

## மன்னார் – இராமேஸ்வரம் படகுச்சேவை விரைவில்!

மன்னார், ஏப். 18
மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையிலான படகுச் சேவைகள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 11

## கத்தோலிக்க ஆலயங்களில் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு!

புனித வார வழிபாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 18
வடக்கில் உள்ள பெரும்பாலான கத்தோலிக்க ஆலயங்களில் தற்போது பொலிஸாரையும், படையினரையும் உள்ளடக்கி சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 11




## சூழலுக்குப் பாதிப்பின்றியே காற்றாலை மின் உற்பத்தி

மன்னாரில் வைத்து அநுர அறிவிப்பு

மன்னார், ஏப். 18
மக்களின் கருத்துகளை அறிந்து, மக்களுக்கு உரிய தெளிவூட்டலை வளங்கியே காற்றாலை மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
மன்னாரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரை 12

## வாகனத் திருத்தகம் தீயில் எரிந்து அழிவு

பெருமளவு சொத்துகள் நாசம்

மன்னார், ஏப். 18
மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானாட்டான் சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வாகனத் திருத்தகம் ஒன்றில் நேற்று இரவு ஏற்பட்ட தீவிபத்துக் காரண 11

## குளத்தில் நீராடியவர் நீரில் மூழ்கி இறப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 18
வரணி சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளமொன்றில் நீராடிய இளைஞர், குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
கொடிகாமம், தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த சிவராசு சிலுசன் (வயது -23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோவில் பகுதி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. பிளஸ் நிறுத்தப்பட்டால் ஆடை உற்பத்திக்கு ஆபத்து

## பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கை




கொழும்பு, ஏப்.18

அமெரிக்காவின் புதிய வரிவிதிப்பால் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டின் ஆடை உற்பத்தித்துறை, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் மேலும் பின்னடைவைச் சந்திக்கும் என்று பொருளியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை 2017ஆம் ஆண்டு முதல் மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்தச் சலுகையைத் தொடர்வதற்கு இலங்கை மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சிறந்த ஆட்சியியல் நிர்வாகம் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பான 27 சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவாக செயற்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனை விதித்திருந்தது.

2022 - 2024 வரையான காலப் பகுதியில் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையால் இணங்கப்பட்ட கடப்பாடுகள் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வரவுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் மதிப்பீட்டை அடுத்து இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நீடிக்கப்படாவிட்டால் நாட்டின் ஆடை உற்பத்தித்துறை பாதிக்கப்படும் என பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

# வனவளத் திணைக்களத்தின் எல்லையிடல் இடைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஏப்.18

வடக்கில் வனவளத் திணைக்களத்தால் காணிகள் எல்லையிடும் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, முத்தையன்கட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கில் காணிகளுக்கு வனஜீவராசிகள் திணைக்களம் எல்லைக்கற்கள் இடுவது தொடர்பாக கடந்தவாரம் வடக்கு ஆளுநர், வடக்கு மாகாண மாவட்டச் செயலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், காணிப் பிரதி அமைச்சர், நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர், வனவளத் திணைக்களத்தினர் உள்ளடங்கலாகக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் வடக்கில் வனவளத் திணைக்களத்தால் காணிகளுக்கு எல்லையிடும் நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளோம். மக்கள் குடியிருக்கும் காணிகள் அல்லது விவசாயம் செய்யும் காணிகளை விடுவிப்பதற்கான கலந்துரையாடல்கள் ஜனாதிபதி மட்டத்தில் நடைபெறவிருக்கின்றன. அதன்பின்னர் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-19)

# திரவப் பால், தயிருக்கு வற்வரி விலக்களிப்பு

கொழும்பு, ஏப். 18

வற் வரி எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலத்தின்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவை வற் வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளனவென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவற்றின் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிக்கை வெளியிட்டு அறிவித்துள்ளது. (ச-இ)

# எதிர்த்தவர்களும் அவர்களே பயன்படுத்துவதும் அவர்களே

## அரசைச் சாடுகின்றார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஏப்.18

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக கடுமையாக போராடிய ஜே.வி.பி.யினர், இன்று அதே சட்டத்தை பிள்ளையானுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஊடகங்கள் எம்மைக் கடுமையாக விமர்சித்தன. சில ஊடகங்கள் சேறுபூசும் வகையில் பரப்புரைகளை முன்னெடுத்தன. ஆனால் நாம் சி.ஐ.டியிடம் செல்லவில்லை. தற்போதைய ஆட்சியாளர்கள் ஒன்லைன் சட்டமூலத்தின் மூலம் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பல மணிநேரம் கதைத்தனர். எதிராக வாக்களித்தனர். இன்று அதே சட்டத்தின்கீழ் பிள்ளையானைத் தடுத்து வைத்துள்ளனர். இதுதான் மிகப்பெரிய அரசியல் நகைச்சுவை.

மாற்றம் எனக்கூறியே இளைஞர்கள் வாக்களித்தனர். தற்போது மாற்றம் எப்படி உள்ளது?

ஏனைய கட்சிகள் செய்யாத கீழ்த்தரமான வேலைகள் இந்த ஆட்சியின்கீழ் செய்யப்படுகின்றன என்றார். (எ-44)

# கடல்சார் பாதுகாப்பு '106'க்கு அழைக்கலாம்



கொழும்பு, ஏப். 18

கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்தும் முகமாக இலங்கைக் கடலோரப் பாதுகாப்பு திணைக்களம் 24 மணிநேர விசேட அவசர தொலைபேசி இலக்கம் '106' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் கடலில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது விரைவான நடவடிக்கைகளை உறுதிசெய்வதுமே இதன் நோக்கமே தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அமெ. வரிப் பாதிப்பை எதிர்கொள்ளத்திட்டம்

## ஏற்றுமதி அபிவிருத்திசபை தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.18

அமெரிக்காவின் வரியால் இலங்கையின் ஏற்றுமதித்துறையில் ஏற்படும் வருமானப் பற்றாக்குறையை, பிற நாடுகளின் சந்தைகள் மூலம் ஈடுசெய்வதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

ஆசிய வலயம், ஆபிரிக்க நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கைப் பொருள்களுக்கு அதிக கேள்வி இருக்கின்றது. இந்த நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்வதற்குரிய முன்மொழிவுகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் வரி விதிப்பால் உலக பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு நன்மைகளைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-44)

# 'க்ளீன் சிறீலங்கா' திட்டத்தில் ஆளும் தரப்பு விதிவிலக்கா?

## மக்கள் கேள்வி



கொழும்பு, ஏப். 18

யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வருகை தந்த நிலையில் பல இடங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் படம் உள்ளடங்கிய சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொள்ளும் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கும் முகமாக இவ்வாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சியேற்ற பின்னர் வாகன அலங்காரங்கள், வீதி சுவர்களில் இருக்கும் சுவரொட்டிகள் அனைத்தையும் 'க்ளீன் சிறீலங்கா' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் தூய்மைப்படுத்திவரும் நிலையில் அவரது கூட்டத்துக்கான அழைப்பு சுவரொட்டிகள் மாத்திரம் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமைக்கு மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னதைச் செய்யாவிடின் எங்களை வெளியேற்றுங்கள்

## தே.ம.சக்தியின் வேட்பாளர் கபிலன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 18

**ஐந்து வருடத்தில் நாம் சொன்னதை செய்யாவிடின் எங்களை வீட்டுக்கு அனுப்புங்கள் எனத் தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளர் கபிலன் தெரிவித்துள்ளார்.**

சங்கிலியன் பூங்காவில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்புடன் நேற்று நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,1981 க்கு முன்னர் எமது யாழ்.மாவட்டம் கடற்றொழில், விவசாயம், சிறுதானியம் என அனைத்திலும் சிறந்து விளங்கியது. எம்மிடம் பருவகால ஆறான வழுக்கையாற்றை மாத்திரம் வைத்து நெல் உற்பத்தியில் வினைத்திறன் உண்டானது. ஆனால் தற்பொழுது இந்த நிலை மாறிவிட்டது. அரச உத்தியோகத்தர்களைத் தாண்டி இளைஞர்கள், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றனர்.

ஆகவே தற்பொழுது எமக்குத் தேவை அபிவிருத்தி மட்டுமே. கடந்தகாலம் போல அல்லாது உங்களுடைய பிரச்சினைகளை மத்திய அரசை சாடாது நீக்கவேண்டும் - என்றார். (ச-125)



# வாக்குச்சீட்டு விநியோகம் நேற்றுமுதல் ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப். 18

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை வீடுவீடாகச் சென்று விநியோகிக்கும் பணி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதிவரை வாக்குச்சீட்டு விநியோகம் இடம்பெறும் என்று பிரதித் தபால் மா அதிபர் பிரேமச்சந்திர ஹேரத் தெரிவித்தார்.

இந்தநிலையில் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கும் பணிகள் நேற்று இடம்பெற்றன. (ச-113)

# உரமானியமின்றி விவசாயிகள் அவதி

கொழும்பு, ஏப். 18

சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான உரமானியம் தாமதமாகி வருவதால், விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். உரமானியத்தை விரைவில் வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அறுவடை செய்வதற்கு சுமார் 10 முதல் 15 நாள்கள் இருக்கும் நிலையில் இந்தக் காலகட்டத்தில் யூரியா உரத்தினை இடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மின்சாரசபைத் தலைவர் மீது ஊழல் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 18

இலங்கை மின்சாரசபையின் தற்போதைய தலைவர் திலக் சியம்பலாபிட்டியவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபைக்கு ஒப்பந்தசேவைகளை வழங்கி அவருக்குச் சொந்தமான தனியார் நிறுவனம் ஊழல் செய்ததாகக் கூறி மின்சார பயனீட்டாளர்கள் சங்கம் சார்பில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தீவகத்தில் கால்நடைத் திருட்டு குழுவொன்று மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

நீண்டகாலமாகத் தீவகப் பகுதிகளில் கால்நடைத் திருட்டில் ஈடுபட்டுவந்த திருடர்கள் வேலணைப் பிரதேச மக்களின் முயற்சியால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வேலணை 6 ஆம் வட்டாரம் சங்கத்தார் கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. வேலணைப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுத்தனமாக பிடிக்கப்பட்ட ஆடுகள் ஒரு தொகுதி, வேலணைப் பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்தன. குறித்த ஆடுகளை வெளியூரைச் சேர்ந்த சிலரின் ஒத்துழைப்புடன் மகேந்திரா வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல குறித்த குழுவினர் முயற்சித்தனர். ஆடுகளைப் வாகனத்தில் ஏற்றும் சந்தர்ப்பத்தில் அதை சிலர் கண்டு சந்தேகித்து சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் பிரதேசத்த வர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் ஆடுகளை பறிகொடுத்த உரிமையாளர்களும் பொது மக்களும் குறித்த இடத்தில் திரண்டு கடத்தலை முறியடித்தனர். கடத்திச் செல்ல முற்பட்ட 6 ஆடுகள், மகேந்திரா வாகனம், மற்றும் இரண்டு சந்தேக நபர்களையும் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதன்போது சந்தேகநபரொருவர் தப்பிச்சென்ற நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளதுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கையெடுத்துள்ளனர். (ச-26)






**பான் போறணைக்குள்ள மணித்தியாலக்கணக்கில மாட்டுப்பட்டால் எப்பிடியிருக்குமெண்டு ஆரும் யோசிச்சுப் பார்த்திருக்கிறீங்களோ? அப்பிடியான அனுபவம் தேவையெண்டால் நீங்கள் கனக்க மினக்கெடத் தேவையில்லை. யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப்போற எக்ஸ்பிரஸ் ஏசி ரெயினில ஏறியிருந்தால் காணும். ஆறேழு மணித்தியாலத்துக்கு நீங்கள் பாண் போறணைக்குள்ள இருந்து போற பயணத்தை அனுபவிக்கலாம். வெளியில அடிக்கிற வெக்கைக்குள்ள இப்பிடி பாண்போறணைப் பயணமும் கிடைச்சால், யமனிட்ட கெதியாப் போடலாம். சிலவேளை மேல கெதியாப் போறதுக்கு வசதி செய்யிறதாலதான் அதை 'எக்ஸ்பிரஸ் ரெயின்' எண்டுகினமோ தெரியேலை.**

**இப்பிடியெல்லாம் புலம்பிற அளவுக்கு அப்பிடியென்ன நடந்ததெண்டு நினைப்பியள். எக்ஸ்பிரஸ் ரெயினில கொழும்புக்குப் போயிருந்தீங்கள் எண்டால் அதின்ர அமைப்பு உங்களுக்கு விளங்கும். மற்ற ரெயினை விடவும் இதின்ர ரிக்கெற் கடும் விலை. அப்பிடிக் காசு கூடவெண்டாலும் கனபேர் இந்த ரெயினில போகவிரும்பிறதுக்கு காரணம். எல்லாப்பெட்டியளுக்கும் ஏசி இருக்கும். அதால வெளியில என்ன வெக்கையெண்டாலும், ஏசிக்குளிரோட அலுங்காமல் குலுங்காமல் கொழும்புக்கு ஆறேழு மணித்தியாலத்தில போடலாம். ஆனால் இப்ப அந்த ஏசிக் குளிர்ப் பயணத்துக்கு அடிக்கடி ஆப்புவைக்கினம். போனகிழமை வெயில் கடும் உச்சம். வெயில் பட்டு, ரெயினுக்குள்ள கடும் சூடு. யாழ்ப்பாணத்தில இருந்து மத்தியானம்தான் உந்த ரெயின் வெளிக்கிடுறது. கொழும்புக்குப்போற ஆக்கள் ரெயினுக்குள்ள ஏறி இருந்தால், வெளியில இருக்கிறதைவிட உள்ளுக்க கடும் வெக்கை. சரி, ரெயின் வெளிக்கிடத்தான் ஏசி வேலைசெய்யுமாக்கும் எண்டும் அவையும் பேசாமல் இருந்திட்டினம். ரெயின் ஓடுது. ஓடுது. ஓடிக்கொண்டேயிருக்குது. ஆனால் ஏசிமட்டும் வேலை செய்யவேயில்லை. சனமும் எவ்வளவு நேரம்தான் பொறுமையா இருக்கேலும்? ரிக்கெற் செக் பண்ண வந்தவையிட்ட ஏசியைப் போடச்சொல்லிச்சண்டை பிடிச்சிருக்கினம். அப்பதான் ஏசி பழுதெண்டும், கொழும்புக்குப் போறவரைக்கும் இப்பிடியே அவிஞ்சுகொண்டுதான் போகோணும் எண்டதும் அவைக்குத் தெரியவந்திருக்குது.**

**இதுதான் கதியெண்டிட்டு வெக்கையைக் குறைக்க ஏதும் வழி இருக்கோ எண்டு பார்த்திருக்கினம். ஏசிதான் வேலைசெய்யாது, சரி ஜன்னலையாவது திறந்துவிடுவம் எண்டால், அதுகளையும் திறக்கேலாமல் போட்டுதாம். காசையும் அள்ளிக்குடுத்து, இப்பிடி வில்லங்கத்துக்கு பாண் போறணைக்குள்ள இருந்து கொழும்புக்குப் போகவேணும் எண்டு அவையளுக்கு என்ன தலைவிதியோ? இப்ப அடிக்கடி இப்பிடி ஏசி வேலை செய்யாமல் விடுறது. சொல்லாமல் கொள்ளாமல் ரெயினை ஓடாமல் விடுறது எண்டு கனக்க குளறுபடியளாம். உரியவை உதுகளை ஒருக்கா கவனிச்சால் என்ன?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர் களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச்செல்வது நல்லது. சிலருக்கு வேலை விஷயமாக வெளியில் செல்ல நேரிடும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சிதரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். மற்றவர்களுக்குக் கொடுத்துவராமல் இருந்த கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.


**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவைப்படும். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மாலையில் வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதுடன் அவர்கள் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

# புள்ளிப்பட்டியலில் மெல்ல முன்னேறுகின்றது மும்பை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ஹைதராபாத்தை வீழ்த்தி முன்னேற்றம் கண்டுள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஹைதராபாத் அணியின் வழக்கமான ஆட்டம் நேற்று எடுபடவில்லை. அணி 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அபிஷேக் சர்மா. இஷான் கிஷான் வெறும் இரண்டே ஓட்டங்களுடன் வந்தவேகத்தில் பவிலியன் திரும்பினார். ட்ராவிஸ் ஹெட் மற்றும் நிதீஷ்குமார் ரெட்டி இருவரும் படுமோசமாக விளையாடினார்கள். 29 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றார் ஹெட். நிதீஷ்குமார் 21 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்றார். அன்கிட் வர்மா மட்டும் கடைசிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடி 8 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது ஹைதராபாத்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பைக்கு ரோகித் சர்மா நல்லதொரு ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார். அவர் 16 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய வில் ஜக்ஸ் 36, சூரியக்குமார் யாதவ் 26, திலக் வர்மா 21, பாண்டியா 21 என சீரான பங்களிப்பை வழங்க, எந்தவொரு இடத்திலும் பதற்றத்தை உணராமல் வெற்றிபெற்றது மும்பை

நீண்டகாலமாக புள்ளிப்பட்டியலில் இறுதி இடத்திலிருந்த மும்பை தற்போது 7ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. சென்னை அணியே கடைசி இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### யாழ்ப்பாணத்தில்

# எதிர்வரும் 5 வருடங்களுள் சர்வதேச கிரிக்கெட் போட்டி

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைத்து, அந்த மைதானத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றையும் நடத்துவோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கைக் கிரிக்கெட் அணியில் அனைத்து இனங்களையும் சேர்ந்த வீரர்களையும் உள்வாங்கிச் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளோம். எங்களின் ஆட்சிக்காலத்துக்குள் அந்த மாதனத்தில், சர்வதேச கிரிக்கெட் ஆட்டமொன்றையும் நாங்கள் நடத்துவோம் என்றார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் சனத் ஜெயசூரிய கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சர்வதேச மைதானத்தை அமைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

# சைவப்புலவர் சங்க நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது .

கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்குரிய சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள், பட்டமளிப்பு விழா, "சைவநாதம்" மலர் வெளியீடு, சைவமாநாடு தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளன.

அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த. குமரன் அறிவித்துள்ளார். (ச-25)

## வாழும்கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 18

எளிமையான தியானம், பிராணாயாமம், யோகாசனம், சுதர்சன கிரியா ஆகியவற்றை உள்ளடக்கிய "வாழும்கலைப் பயிற்சி நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0778645971 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நமக்குக் கற்றுக்கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்; யாரிடம் நாம் கற்றுக்கொள்கிறோமோ அவரே நமக்கு ஆசிரியர்.

—கதே—

## மக்களின் காணிகள் மக்களுக்கே!


வசாவிளான் சந்தியில் இருந்து பொன்னாலை - பருத்தித்துறை வீதிவரையான பலாலி வீதி கடந்தவாரம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. அந்த வீதி மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அந்த வீதியூடாகப் பயணிப்பதற்கு இராணுவம் விதித்துள்ள கடும் நிபந்தனைகளால் வீதி விடுவிக்கப்படுவதால் கிடைக்கும் நன்மைகளை மக்களால் அனுபவிக்கமுடியவில்லை. இந்த வீதி விடுவிப்பு மட்டுமல்ல, கடந்தகாலங்களில் வீதி, காணி விடுவிப்புகள் ஆரவார அறிவிப்புகளுடன் நடந்திருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை தற்போதைய வீதி விடுவிப்பைப் போன்று மக்களுக்குப் பயனற்றவையாகவே இருக்கின்றன. வலி.வடக்கில் கடந்த ஆண்டு விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட காணிகள் இப்போதுவரையில் இராணுவத்தினரின் வசமே இருக்கின்றன. அதேபோன்று காங்கேசன்துறை மாங்கொல்லைக் காணிகள் 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியில் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந் போதும், இவை இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இவை மட்டுமல்ல விடுவித் ததாக அறிவிக்கப்பட்ட இன்னும் பல காணிகள், வீதிகள் மக்களிடம் கையளிக்கப்படாமல் அல்லது விடுவிக்கப் பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படாமல் இருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் பெருமளவான காணிகள் பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இன்னமும் வாடகை வீடுகளில் பெரும் இடர்களுக்கு மத்தியில் வாழ்க்கையைக் கொண்டு நகர்த்துகின்றனர். வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வளம்மிக்க விவசாயக் காணிகள் பலவும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று உரிமையாளர்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுக்கின்றபோதும், போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னரும் பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் அந்தக் காணிகளில் அகலக் கால்பரப்பியிருக்கின்றது.

அரசாங்கம் காணிகள் விடுவிப்பு அறிவிப்புக்களை வெளியிட்டாலும் இராணுவம் அந்தக் காணிகளை மக்களிடம் மீளக்கையளிப்பதற்கு பின்னடிக்கின்றது. காணிகள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட ஏதேனும் சாக்குப்போக்குகளைக் கூறி அந்தக் காணிகளில் தொடர்ந்து நிலைகொள்ளவே இராணுவம் முயற்சிக்கின்றது. இந்தக் காணிகளை பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கையகப்படுத்தி வைத்திருப்பதாக இராணுவம் கூறுகின்றது. ஆனால் இந்தக் காணிகளில் விவசாய நடவடிக்கைகள், தொழில் நடவடிக்கைகள், தொழிற்சாலைகள் என இராணுவத்தினர் பல வருமான மார்க்கங்களை கட்டமைத்துள்ளனர். அவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளும் பெரும் வருமானத்தை இழக்கவிரும்பாததாலேயே ஏதேதோ சொல்லி, அரசின் தீர்மானங்களையும் உதாசீனம் செய்துவிட்டு அந்தக்காணிகளை தன் இரும்புப்பிடிக்குள் இராணுவம் வைத்திருக்கின்றது.

கடந்தகாலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் காணி விடுவிப்பு என்ற காகித அறிவிப்புகளுடன் தங்களின் கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிட்டனர். இதனால் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைமையில் தமிழ் மக்கள் தவிக்கவேண்டியிருக்கின்றது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கடந்தகால அரசாங்கங்களைப்போல ஏமாற்றுவேலைகளைச் செய்யாமல், மக்களுக்கு நூறுவீதம் நன்மையளிக்கக் கூடியவகையில் செயற்படவேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலும், கடந்த அரசாங்கங்களின் காலத்திலும் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகள், மக்களிடம் நூறுவீதம் கையளிக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து, அவ்வாறில்லையெனில் அவற்றை மக்களிடம் மீளக்கையளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இனியும் பாதுகாப்பு என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டிராமல், மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற கொள்கையின்படி அரசாங்கம் நடக்குமா?


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


அநுர அரசாங்கத்திலும்

## மருந்துகளுக்கு கடும்தட்டுப்பாடு



கொழும்பு, ஏப். 18

**கொழும்பு தேசிய மருத்துவமனை உட்பட நாடு முழுவதுமுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,
நீரிழிவு நோயாளிகளுக்குச் செலுத்தப்படும் இன்சுலின் தேசிய மருத்துவமனை கிளினிக்கிலுள்ள நோயாளிகளுக்குக்கூட வழங்கப்படுவதில்லை. இன்சுலின் ஊசி போடும் சில நோயாளிகள் அதை வாங்க பணம் இல்லாததால் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். மருத்துவ விநியோகத் துறையிலும் அரச மருத்துவமனைகளிலும் 13 உயிர்காக்கும் மருந்துகளில் மூன்று முற்றிலும் கையிருப்பில் இல்லை. மருத்துவ விநியோகத்துறையில் 460 அத்தியாவசிய மருந்துகளில் 183 மருந்துகளும், 49 மருத்துவமனைகளிலும் முழுமையாக மருந்துகள் கையிருப்பில் இல்லை.
மருந்துகளின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யத் தவறியதால் எழும் அவசரத்தேவை, பதிவுசெய்யப்படாத, தரமற்ற மற்றும் போலியான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வழிவகுக்கின்றது- என்றார். (ச-இ)

## கனடாவில் பாலியல் வன்கொடுமை இலங்கையர் கைது

கொழும்பு, ஏப். 18
கனடாவின் பிக்கரிங் மற்றும் மார்க்கமிலுள்ள வீடுகளில் மதப் பரப்புரைகளை நடத்திவரும் மதத்தலைவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கைத் தமிழ்ப் பூர்வீகத்தைச் சேர்ந்த 44 வயதான மதப்பிரசாரகரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அவர் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட நிலையில் அவர் மீதான வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## நுரைச்சோலை மின்பிறப்பாக்கி இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 18
நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலுள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளில் ஒன்றின் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை (CEB) தெரிவித்துள்ளது. கடந்த 11ஆம் திகதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார். (ச-இ)



## 'குஷ்' போதையுடன் அமெ.பிரஜை கைது

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு 230 மில்லியன் ரூபா மதிப்புள்ள 23 கிலோகிராம் குஷ் போதைப்பொருளுடன் வந்த அமெரிக்கப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர் நேற்றுமுன்தினம் சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

## வெளிநாட்டவர் வழங்கும் டிஜிற்றல் சேவைக்கு வற்வரி

கொழும்பு, ஏப். 18
வெளிநாடுவாழ் நபர்களின் டிஜிற்றல் சேவைகளுக்கு வற்வரி விதிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.
அதற்கமைய எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் இந்தச் செயற்பாடு நடைமுறைக்கு வரவுள்ளது.
இலங்கையில் வசிக்காத தனிநபர்கள் மின்னணுதளங்கள் மூலம் தனிநபர்களுக்கு வழங்கும் சேவைகளுக்கு வற்வரி பொருந்தும் என்று உள்நாட்டு வருவாய் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
சனிக்கிழமை -சித்திரை 06
19.04.2025
சுப நேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் வருட நினைவஞ்சலி

## சரவணமுத்து மகேந்திரன்
(ஓய்வுபெற்ற அதிபர்)

மறைவு - 18.04.2023



அன்புக்கு அன்பான உயிரின் உறவாக
உள்ளத்தின் வெளிச்சமாக
ஆனந்தம் தரும் விளக்கமாக எம்மை எல்லாம்
காத்து எமக்கு வழிகாட்டியாக
துணையாக என்றும் எம்மோடு இருந்து
எமக்குள் நீங்கா இடம் பிடித்து
எம்மை நல்வழிப்படுத்திய
எமது அன்புத் தெய்வம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CR/0058) J-1

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 10 . 1924

மறைவு 19 . 04 . 2014



## அமரர் மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை
(சின்னம்மா)

திதி: சங்கடஹர சதுர்த்தி

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்.
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்று
பதினொராண்டு சென்றாலும் கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

இல.140, ப்ரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
ம.இராஜநாயகம் குடும்பத்தினர்

## காஷ்மீர் எமதே: இந்தியா உறுதி

காஷ்மீர் முற்று முழுதாக இந்தியாவுக்குச் சொந்தமானது. அதில் பாகிஸ்தானின் எந்தத் தலையீடும் வேரோடு அழிக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெய்ஷ்வால் அறிவித்துள்ளார். (ம)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 24.01.1937

உதிர்வு 29.04.2024



## செல்லத்துரை இராசலட்சுமி மயில்வாகனம்

திதி: 18.04.2025 வெள்ளிக்கிழமை

கண்களை மூடி பார்த்தாலும், கண்களை
திறந்தாலும், கனவிலும்..
என் அன்னையே.. அவள் எப்போதும் நினைப்பது
என்னையே..! தூக்கத்தில் உன்னைப் பற்றி
நினைப்பவள் காதலி.. தூங்காமல் கூட உன்னையே
நினைப்பவள் தாய்.! தமிழில் அம்மா என்ற சொல்
எப்படி வந்தது என்று தெரியாது..
ஆனால் அன்பு என்ற சொல்
நிச்சயம் அம்மாவில் இருந்துதான் வந்திருக்கும்.
என்னை நடக்க வைத்து பார்க்க வேண்டும் என்ற ஆசையை
விட, நான் விழுந்து விடக்கூடாது என்ற கவனத்தில் தான் இருந்தது
உன் தாய் பாசம்.

**பிரிவால் வாடும்**


கணவர் மயில்வாகனம்,
மகள் சறோஜினிதேவி ஆனந்தராசா குடும்பம், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மகள் புஸ்பராணி விக்னேஸ்வரன் குடும்பம், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மகன் வற்சலன் பிள்ளைகள்.
மகன் மகேந்திரன் சிவா மனைவி விஜி குடும்பம், பேரப்பிள்ளை.
தம்பி சிவசுப்பிரமணியம் (மணியம்) மனைவி சந்தானலட்சுமி குடும்பம் (கனடா)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தம்பி செல்வநாயகம் செல்வம் குடும்பம், மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தம்பி நாகரசா குடும்பம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தம்பி சண்முகலிங்கம் குடும்பம், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சுஜெந்தி குடும்பம், பிள்ளைகள், ராஜி அக்கா குடும்பம்.
கல்யாணி பிள்ளைகள் கல்யாணி குடும்பம், மணி அக்கா குடும்பம், சம்பந்தர் குடும்பம்
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அம்மாவின்
ஆத்ம சாந்தி அடைய இறவனை பிராத்தனை செய்கின்றோம்

தொடர்புகளுக்கு:
சிவா - கொழும்பு - 00966 55 218 12 10
தேவி - சுதுமலை - 077 45159 76
ராணி - திருகோணமலை - 075 756 33 79
செல்வம் செந்தில் குமார் திபா - பளை - 077 66 42 173
நாகரச சுதுமலை - 077 972 4167
சண்முகலிங்கம் - மட்டக்களப்பு - 071 513 8870
சந்தன லக்ஷ்மி மோகன் இசன் சுதன் பாபா - கனடா - 001 416 845 35 33
ரூபி கனடா, ராஜி - சுவிஸ் 0041 76 515 65 48

வற்சலன் (மகன் )
0033 753 7420 21
0033 760 1910 35

பிரிவால் துயருறும்
கணவர் - மயில்வானம்
வற்சலன் - மகன்

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## நகுலாம்பிகை பொன்னையா
திதி: 18.04.2025

பாசத்தின் உறைவிடமே
கருணையின் உருவமே
நேசத்தால் பலரையும்
அரவணைத்த மாசற்ற மணிவிளக்கு
ஏன் அணைந்து போனதுவோ
சோகத்தால் தினம் அழுது
புரள்கின்றோம் அம்மா
மீண்டு வரமாட்டாயோ !
சேபிக்கின்றோம் பரப [illegible]டி நீ
அவனடி சேர்ந்ததன [illegible].

தோற்றம் 29.12.1929 மறைவு 29.04.2024 பொன்னாலை மேற்கு


குடும்பத்தினர்

(CR/57986) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 06 . 1956

மறைவு 17 . 04 . 2025



## நடராசா சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர்
ஆசிரியர் கலாசாலை கோப்பாய்)

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு பங்களா வீதியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.04.2025) வியாழக்கிழமை இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோப்பையைச் சேர்ந்த நடராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும். மட்டுவில் கிழக்கை சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். ஜெகதினி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும். சாம்பவியின் அன்புத் தந்தையும். ஜானுசனின் அன்பு மாமனரும். புவனேஸ்வரி, சிவனேசன், ஆரூரன். ஜெகதீஸ்வரி. ஜோகேஸ்வரி. விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும். ஜெகந்தினி (சுவிஸ்). ஜெகவதனி (சுவிஸ்). கிருபாகரன் (சுவிஸ்). சோதிலிங்கம் (சுவிஸ்)ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.202வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வங்களா வீதி,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
077 521 2211

(CS/0062) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணி விடுவிப்பை

# வலியுறுத்தியோர் மீது பொலிஸார் தர்க்கம்

யாழ்ப்பாணம், ஏப். 18



யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலி.வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது அங்கு வந்த பலாலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது உயர் பாதுகாப்பு வலயம். இங்கு கூட்டம் கூட முடியாது என்று பொலிஸார் முரண்பட்டனர்.


"எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே நாம் வந்தோம் என்றும் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தபோதும் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டைகளை வாங்கி பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தவர்களைக் காணொலி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். (ச-20,26,66)

## புத்தாண்டு விழா

கிளிநொச்சி, ஏப்.18

இலங்கை இராணுவத்தின் 55 ஆவது காலாட்படைப்பிரிவின் ஏற்பாட்டில், மக்களுடனான சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டம், கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், சறுக்குமரம் ஏறுதல், தலையணை சண்டை, கோலம் போடுதல், ஓலை பின்னுதல், முட்டி உடைத்தல், வினோத உடை மற்றும் அழகுராணிப் போட்டிகள் உள்ளிட்ட பல பாரம்பரிய விளையாட்டுநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ச-25)



## காரைநகர் கடலில் தத்தளித்தவரைக் காப்பாற்றிய பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 18

காரைநகர் கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி தத்தளித்தவரை விரைந்து செயற்பட்டு பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து சுற்றுலாவுக்காக வந்த குழுவினரில் ஒருவரே இவ்வாறு திடீரென நீரில் மூழ்கிய நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார். குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-27)

# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் - 2025



**கடக ராசிக்காரர்களுக்கு,**






கடக ராசியினருக்கு அஷ்டமத்தில் ராகு இருக்கிறார். தடைகளை உடைத்தெறியும் நெஞ்சுறுதியும், தாராள மனதுடன் எல்லோருக்கும் உதவும் குணமும் கொண்டவர்கள் நீங்கள். உங்கள் ராசிக்கு 4இல் சந்திரன் நிற்கும்போது விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் சகல விதத்திலும் உங்களின் திறமைகள் வெளிப்படும். பழைய கடனை பைசல் செய்யும் அளவுக்கு வருமானம் உயரும். அடகிலிருந்த நகைகளையும் மீட்பீர்கள்.

மன அழுத்தத்தால் அவதி ஏற்படும். வேறு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. 9 இல் சனி எல்லாவிதத்திலும் ஏற்றம், 12 இல் குரு சுப விரைய பிராப்தம் உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகள் செய்வீர்கள். மன அழுத்தம் இல்லாமல் இருப்பது நல்லது. வார்த்தைகளில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். கோபப்பட்டு, உணர்ச்சிவசப்பட்டு எந்தவொரு பெரிய முடிவையும் எடுக்கக்கூடாது. பொறுமையைக் கையாளுவது நல்லது.

பொறுமையைக் கடைப்பிடித்தால் பெரிய மாற்றங்கள், மகிழ்ச்சி உண்டாகும். வாகன அமைப்பில் மாற்றம் உண்டாகும். தனிப்பட்ட தொழில் தொடங்கும் அமைப்பு ஏற்படும். அடிமைத் தொழிலில் இருந்து விடுபட்டு புதிய தொழில் தொடங்குவதற்கான தைரியம் ஏற்படும். தாய் வழி, தந்தை வழி உறவால் அனுகூலம் உண்டாகும்.

## சனி, குருவின் அருளால் அதிர்ஷ்டம்

பேச்சில் கம்பீரம் பிறக்கும். மகனுக்கு வெளிநாட்டில் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிமாநிலங்களில் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு அமையும். வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த வழக்கில் நல்ல தீர்ப்புக் கிட்டும். பங்காளிப் பிரச்சினை முடிவுக்கு வரும். அடிக்கடி தொல்லை கொடுத்து வந்த வண்டியை மாற்றிவிட்டு புதிய வாகனத்தில் பயணிப்பீர்கள். ஓரளவு வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். கேதுவின் சஞ்சாரப்படி, பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள். அதன்மூலம் பிரச்சினைகள் வரலாம். ஆகவே, வாக்குவாதங்களைத் தவிர்த்து விடுங்கள். உறவினர்கள், நண்பர்களிடம் எவ்வித வாக்குறுதியும் கொடுக்கவேண்டாம்.

குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும். எனினும் அவ்வப்போது கணவன் மனைவிக்குள் சின்னச் சின்ன கருத்துமோதல் வந்து போகும். அதையெல்லாம் பெரிதுபடுத்தவேண்டாம். தள்ளிப் போய்க் கொண்டிருந்த மகளின் திருமணத்தை ஊரே மெச்சும்படி வெகு விமர்சையாக நடத்திக் காட்டுவீர்கள். குடும்பத்தில் ஏற்படும் செலவுகளை, சுபச் செலவுகளாக மாற்றிக் கொள்வீர்கள். சோர்வு, களைப்பு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு சவால்களை கொடுத்து, சாதிக்க வைப்பதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேயப்பட்ட தென்னோலை கிடுகுகள் வழங்குபவர்களுக்கான கூறுவிலை கோரல்

ஆனையிறவு உப்பளத்துக்கு மாதாந்தம் 12,000 கிடுகுகள் வீத ஆண்டுக்கு 80,000 வேயப்பட்ட தென்னோலை கிடுகுகள் சேவை வழங்குனர்களிடமிருந்து மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. தகமையுடையவர்கள் விண்ணப்பப் படிவத்தை ரூபா 500/= செலுத்தி 30.04.2025ம் திகதி 01.30PMக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தினுடாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப தாரர்கள் கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் நேரடியாகப் பங்குபற்ற முடியும். விண்ணப்பப் படிவத் தையும் மேலதிக தகவல்களையும் தேசிய உப்பு நிறுவனம், A9 வீதி, ஆனையிறவு, கிளிநொச்சி என்ற முகவரியில் நேரடியாகவும் 0742023334 / 0213204556 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவும் nationalepass@ gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**முகாமையாளர்**
**தேசிய உப்பு நிறுவனம்**
**ஆனையிறவு. கிளிநொச்சி.**

## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## அபிவிருத்தி ஒதுக்க நிதி, சபை நிதி - 2025 கட்டம் - I

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.
03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் SBD -03 இல் தரவு அட்டவணை (Schedule) இலும் SBD – 01 இல் Bidding Data இலும் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினை கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2025.04.21 ஆம் திகதியிலிருந்து 2025.05.05 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் ,லக்கம் 01,02,03 ,ற்கு உரிய வேலைகளிற்கு ரூபா. 6,000.00 உம் ஏனையவற்றிற்கு ரூபா. 3,000.00 உம்(வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
08. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2025.05.06 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2025.04.29 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025.04.21 - 2025.05.05 |
| Pre – Bid Conferece | At 10.00 A.M On 2025.04.29 |
| Closing and Opening of Bid | At 10.00A.M on 2025.05.06 |

| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| Group A | | | | | | | | |
| 01 | NPS/CF-1 /2025/Seg/01 | அரியாலை காரைமுனங்கில் திண்மக்கழிவு தரம் பிரிக்கும் கொட்டகை அமைத்தல். | 17.16 | 112 நாட்கள் | C7 above (கட்டிடம்) | 77 நாட்கள் | 260,000.00 | 2025.08.19 |
| 02 | NPS/CF-1 /2025/Va.Ro/02 | கொக்குவில் வளாக வீதியை காப்பெற் வீதியாக புனரமைத்தல் | 10.45 | 84 நாட்கள் | C7 above (வீதி) | 77 நாட்கள் | 160,000.00 | 2025.08.19 |
| 03 | NPS/CF-1 /2025/Mu.Ro/03 | திருநெல்வேலி முருகன் வீதியை காப்பெற் வீதியாக புனரமைத்தல் . | 12.74 | 84 நாட்கள் | C7 above (வீதி) | 77 நாட்கள் | 192,000.00 | 2025.08.19 |
| Group B | | | | | | | | |
| 04 | NPS/CF-1 /2025/Cir/04 | கோண்டாவில் ஆயர்வேத வளாகத்தில் மகளிர்க்கான சுற்றுலா விடுதி அமைத்தல் | 6.60 | 84 நாட்கள் | C8 above (கட்டிடம) | 77 நாட்கள் | 100,000.00 | 2025.08.19 |
| 05 | NPS/CF-1 /2025/Na.Ro/05 | திருநெல்வேலி நாவலடி வீதியை காப்பெற் வீதியாக புனரமைத்தல் | 8.01 | 84 நாட்கள் | C8 above (வீதி) | 77 நாட்கள் | 121,000.00 | 2025.08.19 |


**தலைவர்,**
**உளளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

2025.04.18

CR/0065) J-

# மக்களுடைய காணிகளை மக்களிடம் கொடுப்போம்

## அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு



**முல்லைத்தீவு, ஏப்.18**

**மக்களின் காணிகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைக் கட்டாயம் செய்வோம். இது தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டி ருக்கின்றோம் என்று விவசாயம் மற்றும் கால்நடைக் காணி அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட் சிச்சபைத் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் காணிகளை இராணு வம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்க ளம் என்பன கையகப்படுத்தியுள்ளன. அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்று எழுப்பப்பட்ட கேள் விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்க காலத்தில் மக்களிடம் இருந்த பொமிட் காணிப் பத்திரங்கள் உறுமய என்ற செயற்றிட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு அவர்களுக்குக் காணி உறுதி வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. திணைக்களங்கள் ரீதியாகப் பல்வேறு பிரச்சினை கள் உள்ளன. அந்தந்தத் திணைக்களங்களுடன் கலந்தா லோசித்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது நடவ டிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது. விரைவில் மக்களுக்குப் பொருத்தமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்போம். உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக நாம் பல்வேறு இடங்களுக்குச் செல்கின்றோம். தேசிய மக் கள் சக்திக்கே அதிகளவான மக்கள் வாக்களிப்பார்கள் என் பதை அறியக்கூடியதாக இருக்கின்றது - என்றார். (எ-19)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 18

வியாபாரிமூலை - இன்பர்சிட்டி ஸ்ரீசித்திவி நாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபி ஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற வுள்ளது. மகாகும்பாஷேகக் கிரியைகள் சைவப்புலவர் சிவஸ்ரீ இரத்தின திருமாறக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி வரை என் ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்று 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.23 முதல் 11.30 மணி வரையான மிதுன இலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில் மகாகும்பாபி ஷேகம் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மண்டலா பிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-100)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.18

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கி ழமை சித் திராப்பூரணையன்று காலை 10 மணிக்குத் தீர்த்தத்திரு விழா வும் நடைபெறவுள்ளன. 13ஆம் திகதி மாலை திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போலித் தமிழ்த்தேசியவாதிகளை தமிழ்மக்கள் நிராகரிக்கவேண்டும்

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப்பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளை மக்கள் அடியோடு நிராகரிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். வலி. வடக்குப் பிரதேசசபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் நேற்றுமுன்தினம் மல்லாகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு - கிழக்குவாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்களித்தனர். தமிழ்த் தேசிய அரசியற் பயணத்தில் இது ஒரு பின்னடைவாகும்.

எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்துள்ளார்கள்.

எம் மத்தியிலுள்ள பல தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகக் காணப்படுகின்றன. இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தென்னிலங்கைக் கட்சிகளோடு போலித் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சேர்த்து நிராகரிக்க வேண்டும் - என்றார். (ச-125,27)

# போதைப்பொருள் வலைப்பின்னல் விரிவுபடுத்தும் கஞ்சிபாணி

## கடல்வழியாக இலங்கைக்குள் போதைப்பொருள் ஊடுருவல்

### பிரதான நுழைவாயிலாக தமிழகம்

**கொழும்பு, ஏப். 18**

**போதைப்பொருள் கடத்தல் உலகின் தாதாவாக வலம்வரும், இலங்கையைச் சேர்ந்த கஞ்சிபாணி இம்ரான், தற்போது இந்தியாவின் கீழக் கரையில் தன் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி வருகிறார் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.**

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த எட்டு பேர் இந்தியக் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 6 கோடி ரூபா மதிப்புள்ள, 'கொக்கெய்ன்' பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தமிழகப் பொலிஸார் தெரிவிக்கையில்,

இலங்கையைச் சேர்ந்தவர் கஞ்சிபாணி இம்ரான்; சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தலில் செயற்பட்டுவருபவர். கடந்த 2019 ஆம் ஆண்டில், டுபாயில் பதுங்கியிருந்த நிலையில் இலங்கைப்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் 2023ஆம் ஆண்டில் பிணையில் வெளிவந்த நிலையில் தலைமறைவானார்.

தற்போது அவர், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து, பல கோடி ரூபா மதிப்புள்ள மெத்ஆம்பெட்டமைன் போதைப் பொருளை, கடல் வழியாக இலங்கைக்குக் கடத்துவது தெரியவந்துள்ளது. கடத்தலுக்கான நுழைவாயிலாக அவர் தமிழகத்தை பயன்படுத்திவருகிறார் என்றும் இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை உள்ளிட்ட பகுதிகளில், தன் சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்திவருவதும் தெரியவந்துள்ளது. அதன் அடிப்படையில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றனர். (ச-இ)

# முறைப்பாடு பதிவுசெய்யாத இளவாலைப் பொலிஸார்!

## இளைஞரொருவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 18

தனது தந்தையின் பணம் களவாடப்பட்டதாக முறைப்பாடு பதிவு செய்வதற்கு கடந்த 10ஆம் திகதி இளவாலைப் பொலிஸ் நிலையம் சென்றபோது அங்கு பொலிஸார் எனது முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லை என இளைஞரொருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு பிற்பகல் 3 மணிக்குச் சென்றபோது மாலை 6 மணிவரை காக்கவைத்த பின்னர் முறைப்பாடு பதிவுசெய்யாமல் ஒரு வெற்றுக் கடுதாசியில் குறித்து வைத்துவிட்டு எங்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

எனினும் இதுதொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது முறைகேடான செயற்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-27)

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் வெற்றி கேள்விக்குறியே


## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 18

உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பிரதேசசபைகளைக் கைப்பற்றும் பட்சத்தில் தமிழ்த்தேசிய கட்சிகளின் இருப்பு கேள்விக்குறியாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியை தோற்கடிப்பதற்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்ந்துள்ளதுடன் எமது கட்சியின் வெற்றியைத் தடுத்து நிறுத்துவதற்காகப் போலிப் பரப்புரை செய்கின்றார்கள். இவர்களைப் பார்க்கும்போது எனக்குக் கவலையாக இருக்கின்றது- என்றார். (ச-இ)



# மோசடிகளால் தடைப்பட்டுள்ள இஸ்ரேல் தொழில்வாய்ப்புகள்!

## *வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிகத்தின் தலைவர் தெரிவிப்பு*


கொழும்பு, ஏப்.18

இஸ்ரேல் தொழில் வேலைத்திட்டத்தில் முன்னாள் அரசியல்வாதிகள் மற்றும் சில நபர்கள் பல்வேறு ஊழல் மோசடிகளைச் செய்துள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோஷல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தச் சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. இஸ்ரேல் நாட்டில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நாங்கள் முயற்சித்துவருகின்றோம். ஆயினும் இந்த விடயத்தில் இன்னமும் சில முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன.

ஏனெனில் இஸ்ரேல் வேலைத்திட்டத்தில் கடந்தகாலங்களில் பல்வேறு மோசடிகள் நடந்துள்ளன. தகுதியற்ற நபர்களை அந்தத் தொழிலுக்கு அனுப்பியதால் அவர்கள் தொழில் நிலையங்களில் இருந்து தப்பிச்சென்றுள்ளனர். அவர்களுக்கு பணிபுரிவதற்கு அனுபவம் இல்லாமையால் இந்த முரண்பாடான நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இஸ்ரேலில் விவசாயத் துறைக்காக தொழிலாளர்களைத் தெரிவுசெய்யும்போது மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் அனைவருக்கும் சமமான முறையில் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். புதிய மறுசீரமைப்பு மற்றும் புதிய வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தி, இஸ்ரேலில் விவசாய துறையில் மீண்டும் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முயற்சித்து வருகிறோம் என்றார். (ச-இ)



# சட்டவிரோத மணலகழ்வு வேட்பாளர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஏப். 18

சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேசிய மக்கள் சக்தியின் காரைநகர் பிரதேசசபையின் வேட்பாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸாரின் கீழ் இயங்கும் காரைநகர் பொலிஸ் காவலரணில் கடமைபுரியும் பொலிஸாராலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை, ஜனாதிபதியின் வருகையை அடுத்து வழக்குகளில் இருந்து விடுதலை செய்வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பொலிஸார் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-125,27)

# ஜெலி வகை மீன் தாக்கியதில் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

ஜெலி வகை மீன் தாக்கத்துக்குள்ளாகி கடற்றொழிலாளர் ஒருவர் காரைநகர் வலந்தலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பகுதியிலுள்ள கடற்கரைக்கு தொழிலுக்குச்சென்ற நிலையில் நேற்று அவர் குறித்த தாக்கத்துக்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்களம் பிற்போனது

சாவகச்சேரி, ஏப். 18

மட்டுவில் கிழக்கு ஞானதீபம் பாலர் பாடசாலையில் இன்று நடைபெறவிருந்த சிறுவர்களுக்கான மகிழ்களம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ம-131)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1944



மறைவு 17 . 04 . 2025

**மகாலிங்கம் அற்புதமலர்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் அற்புதமலர் அவர்கள் நேற்று (17.04.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-இராசமணி தம்பதியின் அருமை மகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், உதயகாந்தனின் பாசமிகு தாயாரும் யோகலட்சுமியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ரட்னம், பூவதி மற்றும் நடராஜா, சோதிமலர், கெங்கேஸ்வரி அவர்களின் அன்பு சகோதரியும் கம்ஷிக்கா, தினிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செம்மணி றோட்,
APC லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

வடக்கு மாகாணத்தில்

# ஊடகவியலாளர்களைக் கொன்றோர் மிகவிரைவில் சிறைக்குச் செல்வர்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 18

வடமாகாணத்தில் ஊடகவியலாளர்களைக் கொன்றோரும், ஆட்கடத்தலில் ஈடுபடுவோரும், மணல் கடத்தலில் ஈடுபடுவோரும் மிக விரைவாக சிறைக்கு அனுப்பப்படுவார்கள் இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலையென மாறுவது உறுதியாகும். முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும் கம்பியெண்ணி வருகின்றனர். அதேபோல படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும்போது தேசிய மக்கள் சக்தியினர் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாக கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினைகள் கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றம் ஊடாகவே அதற்குரிய பணிகள் இடம்பெறும்.

வடக்கிலும் மணல் கடத்தல்காரர்கள் உள்ளனர், ஆட்களை கடத்தியவர்கள் உள்ளனர், ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள், மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராகவும் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். மக்களின் நிம்மதியை சீர்குலைத்தவர்கள், தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகரன் ரௌடி எனவும் கூறத்தொடங்கியுள்ளனர்.

என்னை ரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காக செயற்படுகின்றபோது, மக்களுக்காக குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதை பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர். இதுதான் ரௌடித்தனம் எனில் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பைல்களை தூக்கித்திரிந்தவர்கள்தான் இப்படிச் சொல்கின்றனர். புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டபோது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள்தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்புமிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள்' - என்றார். (ம-26-125)

# மரண அறிவித்தல்

## திருமதி. வெற்றிவேல் ரதிதேவி



பிறப்பு 20.07.1942 — இறப்பு 15.04.2025

யாழ்ப்பாணம் சிவலிங்கப்புலியடி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும், கொக்குவில் சம்பியன் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேல் ரதிதேவி அவர்கள் கடந்த (15.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கீரைமயில்வாகனம்-சாந்தா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேல் அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.04.2025) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகளுக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
பி.பிரந்தாபன்
(076 298 8884)

தகவல்:
பரமானந்தம்-தேசோவதி
குடும்பத்தினர்
பாசமிகு மகன்-
சிறீகரன் (ரமேஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுவிக்கக்கூடிய...

அந்தக் காணிகள் அனைத்தும் விரைவில் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணிகள் விடுவிக்கப்படக்கூடாது என்றும், போர் வரவேண்டும் என்றும்தான் சில சிங்களத் தலைவர்கள் விரும்புகின்றனர். ஆனால், அவ்வாறான நிலைப்பாட்டில் நாம் இல்லை. நிச்சயமாகக் காணிகள் உடன் விடுவிக்கப்படும்.

போர் நிறைவடைந்த பின்னரும் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரை பல காணிகளை விடுவிக்காது அடாத்தாக வைத்திருந்தனர். ஆனால், நாங்கள் படிப்படியாக பாதைகளை விடுவித்துவருகின்றோம். காணிகளை மட்டுமல்லாமல், விடுவிக்கக்கூடிய பாதைகளையும் நாங்கள் விடுவிப்போம் - என்றார். (அ-ம-125-26)

## தமிழர்களின்...

பதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் அரசியற் கட்சிகளுக்குக் குறைவில்லை. பாரம்பரியமாக அரசியலில் ஈடுபட்டுவரும் தரப்புகள்கூட இங்கு உள்ளன. 1947ஆம் ஆண்டு முதல் அரசியல் வரலாற்றைக் கொண்ட கட்சிகள்கூட உள்ளன. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களையெல்லாம் புறக்கணித்து எங்களைத் தெரிவுசெய்தனர்.

ஏன் எங்களைத் தெரிவுசெய்ய வேண்டும்? எதற்காக எங்களைத் தெரிவுசெய்ய வேண்டும்? ஏனெனில் எங்கள் மீதான அவர்களின் அன்பும், நம்பிக்கையும் தான் இதற்கெல்லாம் காரணம்.

அந்த நம்பிக்கைக்கும் அன்புக்கும் ஒரு போதும் நான் துரோகம் செய்யப் போவதில்லை. இதற்காக நான் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள நேரிடலாம், இனவாத விமர்சனங்களை நான் எதிர்கொள்ளவேண்டிவரலாம். ஆயினும், தமிழ் மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கைக்கு நாங்கள் துரோகம் இழைக்கப் போவதில்லை - என்றார். (அ-ம-26-125)

## உறவுகளைத்...

புரியும் என்று ஜனாதிபதி அநுர கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமற்போன பிள்ளைகளுக்காகவும், உறவுகளுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தாய்மார்களின் வேதனை எனக்குத் தெரியும். ஓர் உறவு உயிரிழந்துவிட்டால் நாங்கள் துன்பப்படுவோம், அழுவோம். காலப்போக்கில் அந்தக் காயம் ஆறிவிடும். ஆனால், ஓர் உறவு காணாமற்போனால், அந்த உறவுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அனுதினமும் மனவுளைச்சலையும், துன்பத்தையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அந்த வேதனை கொடியது. எனது சகோதர் ஒருவர் காணாமலாக்கப்பட்டவர்தான். ஆதலால், அந்த வலியைப் பட்டுணர்ந்தவன் என்ற ரீதியில் மிகவும் பொறுப்புடன் நான் இந்த விடயங்களைக் கூறுகின்றேன். எனவே, காணாமலாக்கப்பட்டோரின் விடயத்தில் மிகவும் நீதியாகவும் நேர்மையாகவும் நாங்கள் விசாரணைகளை நடத்துவோம் - என்றார். (அ-ம-125-26)

## தபால்...

பட்டுள்ளன. உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தபால்மூலமான வாக்களிப்பு எதிர்வரும் 22ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறுவதாக இருந்தது. இந்த நிலையில், தற்போது தபால் வாக்களிப்புத் திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புகள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. எனினும் அஞ்சல் மூல வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட மேலதிக நாள்களான 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ம-இ)

## மன்னார்...

மன்னாரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் முன்பு படகுச்சேவை இருந்தது. அதை நாங்கள் மீண்டும் செயற்படுத்தவேண்டும். இதுதொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய இராமேஸ்வரத்துக்கு மீண்டும் படகுச் சேவை ஆரம்பிக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## வாகனத்...

மாக, அந்தக் கடை முற்றாக எரிந்து அழிந்துள்ளது.

குறித்த திருத்தகத்துக்குள் சில மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்றும், அவையும் எரிந்து அழிந்துள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அருகிலுள்ள ஆலயத்தில் புனித வியாழன் வழிபாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில், வழிபாட்டில் கலந்துகொண்ட இளைஞர்கள் கடை பற்றியெரிவதை அவதானித்து அதைக்கட்டுப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். எனினும், எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. மின்னொழுக்குக் காரணமாக இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-56)

## குளத்தில்...

யில் உள்ள திம்புருவில் குளத்தில் நீராடியுள்ளனர். அப்போது மேற்படி இளைஞர் தாமரைக்கொடியில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார். அவர், வரணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தில் பொலிஸார் சிலரும் இளைஞர்களுடன் இணைந்திருந்தனர். அவர்களும் இணைந்தே இளைஞர்களுடன் குளத்தில் நீராடினார்கள் என்று சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் தெரிவித்தனர். சடலம் மரண விசாரணைக்காகவும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## கத்தோலிக்க...

தவக்காலத்தின் இறுதிப்பகுதியான புனித வார வழிபாடுகள் (பெரிய வியாழன்) நேற்று ஆரம்பமாகியுள்ளன. இதைத் தொடர்ந்து, பெரிய வெள்ளி வழிபாடுகள் இன்று மாலையும், உயிர்த்தஞாயிறு வழிபாடுகள் நாளை நள்ளிரவும், நாளைமறுதினம் காலையும் இடம்பெறவுள்ளன. இவற்றை முன்னிட்டே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம)

## திஸ்ஸ...

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திஸ்ஸ விகாரை தொடர்பில் நான் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளேன். அது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் ஆலோசனைகளையும் நடத்தியுள்ளேன். உண்மையில் திஸ்ஸ விகாரை விவகாரம் மிக இலகுவாகத் தீர்க்கப்படவேண்டியது. அந்த விகாரையை அடிப்படையாக வைத்து வடக்கிலும், தெற்கிலும் அரசியலாக்கப் பார்க்கின்றனர். அந்த அரசியல் நீக்கப்படும் பட்சத்தில் விகாரை தொடர்பான பிரச்சினைக்கு, விரைவாகவும் இலகுவாகவும் நாங்கள் தீர்வைக் காண முடியும். விகாரைக்கான தீர்வை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-125-26)

## உயர்...

தெரிவித்ததாவது:-

யுத்தம் முடிந்து 15 ஆண்டு காலம் முடிவடைந்தும் ஐந்தாவது ஜனாதிபதி மாற்றமாகியும், நாலாவது நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டும் இதுவரை சுமார் 2 ஆயிரத்து 900 ஏக்கர் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி, பலாலி வீதியின் ஒருபகுதி நிபந்தனைகளுடன் பகல் நேரத்தில் மாத்திரம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த முடிவுகளை வரவேற்கின்றோம். ஆனால், 2018ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புக் குழுவின் அனுமதி பெறப்பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி போன்ற கிராமங்களில் விடுவிக்கப்படவிருந்த சுமார் 500 ஏக்கர் காணிகளில் 50 ஏக்கர் காணிகள் மட்டுமே இதுவரை மக்களின் தேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளிலும் கெடுபிடிகள் தொடர்கின்றன.

எனவே, தேசிய மக்கள் சக்தியிடம் நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

1. வலிகாமம் வடக்கில் முப்படையினரதும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் காணிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.
2. 1983ஆம் ஆண்டு முதல் விமான நிலைய விஸ்தரிப்புக்கெனக் கையகப்படுத்தப்பட்டும், இதுவரை எந்தவித பயன்பாடோ அபிவிருத்தியோ செய்யப்படாத காணிகள் உடனடியாக உரிமையாளரிடம் கையளிக்கப்படவேண்டும்.
3. ஜனாதிபதி மாளிகை மற்றும் தையிட்டி விகாரை போன்ற காணிகள் தொடர்பாக விசேட அவதானம் எடுத்து நீதியான முறையில் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக காணிகளை மீளளிப்பதற்கான வெளிப்படையான தீர்வொன்றை முன்வைக்கவேண்டும்.
4. தற்போது அரசின் அமைப்புகளால் கையகப்படுத்தப்பட்டு அல்லது பயன்படுத்தப்படும் அனைத்துக் காணிகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய முழுமையான வெளிப்படையான அறிக்கை ஒன்றைப் பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படுத்தவேண்டும்.
5. விடுவிக்கப்பட்ட காணிகளைப் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதில் உள்ள சவால்களை நீதியானதும், மனிதாபிமான முறையில் கையாண்டு காணிகளைப் பாதுகாப்பதற்கும், எல்லைகளைநிர்ணயிப்பதற்கும் அரசநிதி ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும்.
6. இந்தப் பகுதிகளில் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையே. ஆகையால், நீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வாக்குறுதி அழித்துள்ள தேசியமக்கள் சக்தி அரசு காணிகளை விடுவிப்பதுடன் குறைந்தது வீடுகளை மீளக்கட்ட அல்லது புனரமைக்கத் திட்டமிடல் செய்து வருடாந்தம் இதற்கான நிதியினை வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யவேண்டும்.
7. 1981ஆம் ஆண்டு வடக்கு மக்களுக்காகக் கட்டப்பட்டு 2017ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் மயிலிட்டி உட்பட வடபகுதி மீனவர்களின் தேவைக்குப் பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.
8. கையகப்படுத்தப்பட்ட இந்திய இழுவைப்படகுகள் மற்றும் தென்பகுதியிலிருந்து வரும் பெரிய மீன்பிடிப் படகுகள் குறைக்கப்பட்டு உள்ளூர் மீனவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.
9. மயிலிட்டித் துறைமுகம் மயிலிட்டி மீனவர் சங்கத்தின் பராமரிப்புக்கு வழங்கப்படவேண்டும். மீன்பிடித் துறைமுகங்கள் நாடெங்கும் மீனவர் சங்கங்களின் முகாமையிலேயே உள்ளன. இருந்த போதும் மயிலிட்டித் துறைமுகம் இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலும், கடற்படையின் கட்டுப்பாட்டிலுமே இதுவரை உள்ளது. மயிலிட்டித் துறைமுகத்தின் நிர்வாகம் உடனடியாக மீனவர் அமைப்புகளிடம் கையளிக்கப்படவேண்டும்.
10. காங்கேசன்துறை - கீரிமலை வீதி மற்றும் கட்டுவன் - வயாவிளான் வீதி உட்பட மூடப்பட்டுள்ள அனைத்து வீதிகளையும் உடன் திறப்பதுடன் அந்த வீதிகள் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கான இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.
11. தமது கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் அழித்துச் சேதமாக்கப்பட்ட அனைத்து மத ஆலயங்கள் மற்றும் கோவில்களை விடுவித்து அரசசெலவில் மீள் புனரமைப்புச் செய்வதை அரசு உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் - என்றனர். (அ-ம-66)

## உச்சகட்ட...

செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை விடவும், நேற்றைய பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமடங்கு உயர்த்தப்பட்டிருந்தன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பகுதிகளில் விலங்குகளுக்குத் தடுப்பூசி

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 794 8012

## கடை விற்பனைக்கு

பலாலி றோட் உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள கடை விற்பனைக்கு உண்டு
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு:077 688 5392

## வேலை ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு கீழ்குறிப்பிட்ட வேலை ஆட்கள் தேவை. (ஆண், பெண்)

- விற்பனையாளர்
- பில் போடுபவர்
- பைக்கிங் செய்பவர்
- காசாளர்

உடன் தேவை.

தொடர்பு:- 076 028 9835

## உடனடி வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் உடனடி வேலை வாய்ப்பு
12 நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகைமைகள் O/L , A/L
வயதெல்லை 23 - 39 வயதிற்குட்பட்டவர்கள்.

077 335 3461 , 077 408 8241

யாழ்.நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன. ஒரு நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை மூத்த விநாயகர் சனசமூக நிலையம், மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி மூத்த விநாயகர் கோவிலடி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ஆசீர்வாதப்பர் வீதி லக்கி ஸ்ரோர் ஆகிய இடங்களிலும், 22 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை நாயன்மார் வீதிச் சந்தி, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை கடுக்காய் வீதி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களிலும், 23 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை ஆடியபாதாம் வீதி வாழையம்மன் கோவிலடி, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை முத்தமிழ் முன்பள்ளி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை செல்லர் வீதி சிறுவர் இல்லம் அருகாமை ஆகிய இடங்களிலும், 24 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை காசிப்பிள்ளை பாடசாலைக்கு அருகாமை, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ஜமுனா வீதி ஆகிய இடங்களிலும், 25 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை செட்டியார் தோட்டம், மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கொண்டலடிச் சந்தி ஆகிய இடங்களிலும் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை யாக்கோபு பாலர் பாடசாலை, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை குமார வீதி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சங்கிலியன் வீதி ஆகிய இடங்களிலும், 29 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை நல்லூர் குறுக்கு வீதி, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை செட்டித்தெரு நல்லூர், பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கைலாசப்பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களிலும், 30 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை கோவில் வீதி இந்துமாமன்றம் ஒழுங்கை, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை வைமன் வீதி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை துர்கா மணி மண்டபம் ஆகிய இடங்களிலும், 2 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை,மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1மணி வரை பருத்தித்துறை வீதி நாவலர் கல்வி நிலையம்,பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்தி ஆகிய இடங்களிலும், அடுத்த மாதம் 3 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை ஜன சக்தி சனசமூக நிலையம் அரசடி வீதி, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம், பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சிவன் புது வீதி ஆகிய இடங்களிலும், 4 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை சிவன் அம்மன் கோவிலடி, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை மணல் தரை வீதி, பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பலாலி வீதி ஆலடிச் சந்தி ஆகிய இடங்களிலும், 5 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை அரசடி 5ம் ஒழுங்கை, மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை பலாலி வீதி ஜே103 கி.சே அலுவலகம், பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அம்மன் வீதி நல்லூர் ஆகிய இடங்களிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன.

(ச-25)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
21 • 06 • 1942



மறைவு
19 • 03 • 2025

கடந்த 19.03.2025 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி
**அமரர் தேவராசா நாகேஸ்வரி**
(காலி ஆனந்தம் அவர்களின் பாரியார் )

அன்னாரின் வீட்டுக்கிருத்தியை இன்று (18.04. 2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல் மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

47, பெரிய தம்பிரான் வீதி ,
வண்ணார்பண்ணை

(CS/57989) J-1

குடும்பத்தினர்

## சூழலுக்குப்...

யில் ஜனாதிபதி அநுர தெரிவித்ததாவது:-

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சுமார் 5 - 6 வருடங்களுக்கு பின்னர், தற்போதுதான் நாட்டில் உச்சபட்ச டொலர் இருப்பில் உள்ளது.

கடந்த 6 மாதங்களாக ரூபாவின் மதிப்பு சரியவில்லை. நாம் எரிபொருள் விலையைக் குறைத்தோம். அதுபோல், மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள் ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் பாடுபடுகிறோம். அரச ஊழியர்களின் சம்பளம் உயர்ந்துள்ளது.

அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 300இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு காலணிகள் வாங்க பணம் வழங்கப்படுகிறது. 1.6 மில்லியன் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய தலா 6 ஆயிரம் ரூபாவை வழங்கினோம்.

அது மாத்திரமல்லாமல், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தற்போது 30 ஆயிரம், பேரை அரச சேவையில் சேர்க்க உள்ளோம். இதற்காக எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு பின்னால் செல்ல வேண்டிய அவசியமில்லை. பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவோம், அதன்படி பரீட்சைக்குத் தோற்றி அதிகபுள்ளிகளைப் பெற்று வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள். அரச சேவையில் தமிழ் பேசுபவர்களின் பற்றாக்குறை உள்ளது. பொலிஸ் நிலையங்களிலும் இது காணப்படுகின்றது. எனவே, பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார்.

(அ-ம-56)

## உடனடி வேலைவாய்ப்பு

- CNC வடிவமைப்பு. இயக்குனர்
- காப்பென்டர் (Carpenter).
- Board வேலை தெரிந்தவர்கள்
- தொழிற்சாலை உதவியாளர் (ஆண், பெண்)

✓ அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு
✓ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
✓ நேர்முகத்தேர்வு 19.04.2025, 26.04.2025 ஆகிய இரு தினங்கள் காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

EUT
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
யாழ்ப்பாணம்

021 224 0110
077 287 2519

(CR/0064) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org